*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2023** **06 மார்ச் 2023**

**<u>பத்திரிகை செய்தி</u>**

பாரத் தர்ஷன் திட்டத்தின்கீழ் திருமதி ரேஷ்மி ஷர்மா தலைமையில் புதுச்சேரி வந்துள்ள ஐந்து மாநிலங்களைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணி பயிற்சி அதிகாரிகள் இன்று(06.03.2023) மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் அவர்களை துணைநிலை ஆளுநர் மாளிகையில் மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினர். அவர்களை வரவேற்ற துணைநிலை ஆளுநர், தமது அனுபவங்களை அவர்களோடு பகிர்ந்து கொண்டார்.

மேலும், "இந்தியா விடுதலை பெற்றபோது நிர்வாகத்தை கவனிக்க ஆங்கிலேய அதிகாரிகளை சிறிது காலம் தங்க வைக்கலாம் என்ற ஒரு கருத்து எழுந்தபோது, வேண்டாம் இந்திய அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதே சிறப்பாக இருக்கும் என்ற தெரியமான முடிவை சர்தார் வல்லபாய் படேல் எடுத்தால். அதன்படி இன்று திறமையான அதிகாரிகளை நாம் பெற்று வருகிறோம்.

திறமையான அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் செயல்படும்போது பாரதப் பிரதமர் கனவு கண்ட எதிர்கால இந்தியாவை உருவாக்க முடியும். மக்கள் சேவை ஒன்றே தமது குறிக்கோளாக எண்ணி செயல்பட வேண்டும். அதே சமயம் அதிகாரிகள் தங்களது ஆரோக்கியத்தையும் குடும்பத்தையும் கவனிக்க நேரம் ஒதுக்க வேண்டும். யோகா பயிற்சி செய்ய வேண்டும். நேரத்திற்கு உணவு எடுத்துக் கொள்ள வேண்டும்."
என்று தெரிவித்தார்.